முருகப்பெருமான் துணை

**மகான் ஏயர்கோன்கலிகாம நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.09.2023,** வியாழக்கிழமை

1. அருமருந்தாகி நின்றருளுகின்ற
ஆறுமுகனார் அம்சமாகவே
தருமபலம் காக்கின்ற அரங்கா
தவசியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
குறைவிலா லாப திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 11 ம் நாள், 28.09.2023, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க ஏயர்கோன்கலிகாம நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
ஞானமே மக்களை தேற்றும் வழி
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே உலகம் எங்கிலும்
வருங்காலம் ஞானவான்களும்
தருமவான்களும் நிறைந்த நல்
தக்க பெருமாற்றம் நிகழும்
5. நிகழவே அரங்கன் ஆசிபட
நீதி நெறி காக்கப்பட்டு
வகையான தொண்டர்படைகள்
வரமாக எங்கும் நிரம்பி
6. நிரம்பியே அரசியல் களமாக
நீதிமான்களும் இறங்கிட
வருங்காலம் நல்லோர்களாக
வையகத்தை மாற்றும் வண்ணம்

7. வண்ணமுடன் தேர்தல் களம்
வலுப்பெற்று சந்திக்கும்படி
எண்ணம் பலம் கூடி இனிதே
எங்கும் ஞானவான்கள் தேர்வு கண்டு

8. கண்டுமே ஞானத் தலைமை
கலியிடரை வெல்லும் தலைமை
தொண்டும் தூய்மையும் கலந்த
தெய்வீகத் தலைமை ஆகி

9. ஆகியே அரங்கமகான் ஆசிபட
அமைந்திடும் ஞான ஆட்சி
அகிலம் வியக்க மாற்றம்
அரங்கமகான் தொண்டர்கள்

10. தொண்டர்கள் சேவை தன்னால்
தேசமெங்கும் அற்புதம் நடக்கும்
உண்டாகும் ஞானசித்தரின்
உயர்வுகண்ட காலமாக

11. ஆகவே விடியல் துவங்கும்
ஆகாத அஞ்ஞானவான்கள்
வகையிலா ஆளுமை முடிவுறும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—